# செந்தமிழ்

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி-டுரு | துன்முகி-பங்குனி | Vol. 53
பகுதி-ரு | March-April—1957 | No. 3




4953



## உள்ளுறை.

தமிழ்ச் செல்வம் II — 65
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

ஆற்றங்கரை பண்பாடு: — 76
டாக்டர். மா. இராசமாணிக்கனார்.

சிலப்பதிகாரம்—கானல்வரி; — 84
பண்டித-வித்துவான் தி. சங்குப்புலவர்.

தமிழில் தலைச்சொல்லாக்கத்திற்கு எழுத்துப் பெயர்ப்புச் சிறந்ததா? மொழி பெயர்ப்புச் சிறந்ததா? — 91
எஸ். அல்லாபிச்சை.

### "செந்தமிழ்" ஆசிரியர் குழு:

திருவாக ஆசிரியர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (பார்-அட்-லா)

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)
2. திரு. பேராசிரியர், செந்நாப்புலவர் ஆ. கார்மேகக்கோனார், மதுரை
3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T. Ph. D. தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை
4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D. தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.
5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.
6. திரு. முகமது சுல்தான் அவர்கள், M. A, B. L. வழக்குரைஞர்—மதுரை.
7. திரு. வி. சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
8. திரு. இ. பழநியப்பன் அவர்கள், தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-௫௩.] துன்முகி௵—பங்குனி௴ [பகுதி-௩.

Vol. 53. March-April—1957. No. 3.

## தமிழ்ச் செல்வம்

### II

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

நம் தமிழ்ச் செல்வி தன் இளமையுடல் வேறு உடம்புகளைப் படைத்து நல்கும் வளமை பெறுங் காலத்தில் தனக்கேற்ற துணைவன் ஒருவனைத் தேர்ந்து கொள்வள். தமிழ்ச் செல்வி என்பவள் பெண்ணினத்தின் தலைமைக்குரிய உயர் பண்புகள் அனைத்தும் உருவாகத்திரண்டவள்; அழகு, அறிவு, கற்பு முதலிய நலம் யாவும் அவள் வடிவமாக அமைந்தவை யெனக் கொள்ள வேண்டும். அவள்பால் குற்றமோ குறையோ யாதும் கிடையாது என்பது கருத்து. அவளுக்குத் துணைவனாகிறவன் ஆடவரினத்துக்கு இன்றியமையாத தலைமைப் பண்பும் தலைமைச் செயலும் திரண்டு அறிவு அழகு ஆண்மை ஆகிய நலமெல்லாம் தன்பாற் கொண்டு விளங்குபவனாக உணர்தல் வேண்டும். இவ்வாறு பெண்ணினத் துள்ளும் ஆண்பாலருள்ளும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மக்களைப் படைத்துக் கொண்டே சான்றோர் அறம் கூறுவது வழக்கம். இன்றும் நாட்டில் நிலவும் சட்டநூல் வரம்பு கடவாத ஒருவனை என்றும் காணமுடியாது; அந்நிலையில் வைத்துத்தான் அரசியற் சட்டங்கள் வாழ்க்கை முறை (Ideal life) வகுத்துள்ளன. பண்

டைய தமிழ்ச் சான்றோரும் தமிழ்ச் செல்வியைத் தலைவி (Ideal womanhood) யென்றும் தமிழ்ச்செல்வனைத் தலைவன் (Ideal man hood) என்றும் நிறுத்தி ஒழுக்கங்கள் உரைத்துள்ளனர். ஒழுக்க நூலும் வழக்குநூலும் அறியாதவர்கள் தலைவன் தலைவி என நூல் களில் குறிக்கப் படுபவர் யாவரோ ஒருவர் எனவும் அவர்கட்கும் உலக மக்கட்கும் ஒருதொடர்பும் இல்லை யெனவும் கருதுவர்; தம் கருத்திற் கண்டகண்ட வாறும் கூறுவர்.

இளமைக் காலத்தில் மக்களுடல் தன்னலமே பேணித் தன் வளர்ச்சி யொன்றையே குறிக்கொண்டு இயலும். இளஞ்சிறாரிடத்தில் ஏதேனும் தின்பண்டம் வழங்கின் எல்லாம் தனக்கே என அவாவும் செயல் அவர்பால் விளங்கித் தோன்றுவது காணலாம். வழங்குபவர் மற்றைச் சிறுவனைத் தம்பியென்றும் தங்கை யென்றும் அண்ணனென் றும் அக்கா என்றும் அவர்கட்கும் கொடுக்கவேண்டும் என்றும் கூறும் இனிய நயமொழிகளால் சிறுவர்பால் தன்னலப்பிணிப்பு நெகிழ்வதைக் காணலாம். அக்காலத்தே உயிரறிவு போதிய வளர்ச்சியின்றி யிருப்ப தால் உடலுணர்ச்சி அதனைத்தன்கீழ்அடக்கித் தன்வளர்ச்சிக்கு ஆகும் பணியையே செய்து கொள்கிறது. கல்வி கேள்விகளாலும் சூழ்நிலையா லும் உயிரறிவுவளர்ந்து வுன்மை பெறுங்கால் உடலுணர்ச்சியும் வேட் கையும் அறிவு வழி இயங்கும். அக் காலையில் தான் மக்கள் வாழ்வு மக் கட் பண்புடன் கால் கொள்ளுகிறது. இளமைக்கண் உடல்வேட்கை மிக்கு நின்று தான் வளம் பெறுவதையே குறிக்கொண்டு ஒழுகுவதற் குக் காரணமும் இல்லாமல் இல்லை. அது விரைவில் வளம்பெற்றுத் தன் னைப் போல வேறு உடம்புகளைப் படைப்பதாகிய இயற்கை யறத்தைச் செய்யவேண்டும். உடலும் ஏனைச் செடிகொடி மரம் புள் விலங்கு முத லிய உயிரினம் போல உண்பன உண்டு இனம் பெருக்கி மூத்து விளி யும் இயற்கை யறத்தின்பாற் பட்டது. அதுபற்றியே நம் உடம்பு இள மைக் கண் உணவு வேட்கை மிக்கு நாளும் வளர்வதையே பொருளா கக் கொண்டிருக்கிறது. அப்போது, உண்ட உணவு வழித் தோன்றும்

உரம் உடற் கூறு அனைத்தினும் பரவி என்பு, நரம்பு, தசை முதலிய எல்லாம் வளம்பெறச் செய்தற்குவிரைகின்றது. அதனால் சிறுவர்கள் உறங்கும்போதொழிய ஏனைய எப்போதும் ஓடியாடிக் கையும் காலும் கண்ணும் கருத்தும் விருவிருப்போடு இயக்குவது கண்கூடாகஇருக்கிறது. அச் செயலால் கண் காது மூக்கு வாய் மெய் என்ற அறிகருவிகளும் அறிவன அறியும் செய்கையில் ஆர்வமுறுகின்றன; அறிவு வளர்ச்சியும் பெறுகின்றது. அந் நிலையில் இளஞ் சிறுவர்கள் ஆணுயினும் பெண்ணுயினும் விளையாட்டையே விரும்பி நிற்பர். அவ் விளையாட்டு உடல் வளர்ச்சிக்கும் அறிவுப் பேற்றுக்கும் ஆக்கமாதலால் அறிவுடையோர் சிறுவர்களை விளையாட்டின்கண் ஊக்குகின்றனர். பண்டும் இவ் வுண்மையைத் தமிழ் நன்மக்கள் அறிந்து இளையரை விளையாட விடா தொழிவது அறமும் அன்று; ஆக்கமும் ஆகாது எனக்கருதினர். “விளையாடாய மோடு ஓரை யாடாது, இளையோர் இல்லிடத்து இற்செறிந்திருத்தல், அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம் என......வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே” (நற். 68) என்று அறிவுறுத்தியுள்ளனர். அந் நெறியால் காமச் செவ்வி எய்திய வழியும் தமிழ்ச் செல்வி மாலைப் போதுகளில் மலர்ச் சோலை முதலியவற்றில் ஆயமகளிர் சூழ்வரச் சென்று விளையாடல் இயல்பாகக் கொண்டனள். அவ்வாறு அவள் விளையாடி இன்புறுவதை அவள் பெற்றோரும் உவகையுடன் ஊக்கினர்.

தமிழ்ச் செல்வி தன் தோழியருடன் குறிஞ்சியாயின் மலைச்சாரல், மலைச்சுனை, மலையருவி முதலிய இடங்களிலும், முல்லையாயின் முல்லைக் கொடியும் பாகற் கொடியும் படர்ந்த காட்டாற்றுக் கரை, பிடவும், குருந்தும் பிறவும் செறிந்த குறுங்காடு ஆகிய இடங்களிலும், மருதமாயின் நீர்த்துறை, மாவும் மருதும் நின்ற தண்டலை முதலியஇடங்களிலும், நெய்தலாயின் கழிமருங்கு, கானற்சோலை, கடற்கரை முதலிய இடங்களிலும், மகளிர்க் குரிய விளையாட்டுக்களை மேற்கொள்வள். அவ் விளையாட்டிடத்துக்குத் தமிழ்ச் செல்வக் காளை யொருவன் தனித்துப் போந்து செல்விக்கு யாதானும் ஓர் உதவியோ இனிய

சொல்லாடலோ செய்வன். அதுவே பற்றுக்கோடாக அவட்கு அவன்பால் காதலன்பு தோன்றும்; அவனுக்கும் அவள்பால் காதல் பிறந்து கருத்தைப் பிணிக்கும்.

குறிஞ்சி நிலத்தே, ஒருகால், ஒரு தமிழ்ச் செல்வி தன் தோழியருடன் சென்று மலைச் சாரலில் மலர்ந்து நின்ற வேங்கை மரத்தின் பூக்கொய்து விளையாடலுற்றாள். மரத்திலேறிப் பூக்கொய்துகொண்டிருக்கையில் ஒருசில மகளிர் வேங்கையின் பூவுதிர்ந்த கரும்பாறை புலிபோலத் தோன்றக் கண்டு விளையாட்டாகப் "புலி புலி" என்று இரைச்சலிட்டனர். அதுகேட்டுத் திடுக்கிட்ட பிறமகளிரும் உண்மைதெளிந்து கொண்டனராயினும் விளையாட்டு விருப்பால் தாமும் "புலி புலி" என்று பொங்கிப் பூசல் தந்தனர். அவ் வழியே வடிவெடுத்த காமன் போல வடிக்கணையும் வரிவில்லும் ஏந்திய தமிழ்ச் செல்வன் ஒருவன் வந்தான். அவன் காதில் இம் மகளிர் எழுப்பிய பூசலொலி வீழ்ந்தது. உடனே அவன் தன் வில்லில் ஓர் அம்பினைத் தொடுத்து அவர் முன்னே போந்து எங்கே, எங்கே புலி? என வினவி நின்றான். அவனைக் கண்டதும் மகளிர் பலரும் நாணி ஒருவர் பின் ஒருவராக மறைந்து கொண்டனர். அவர் முகம் தோன்றாது கரியகூந்தல் தன் கண்ணிற்குத் தோன்றின மையின், "கருங்குழலீர், நும் வாய்ப் பொய்யும் உளவோ?" என்றான். அவர்கள் ஒன்றும் கூறாமல் நாணித் தலை யிறைஞ்சி நின்றொழிந்தனர். தமிழ்ச் செல்வி அவனை நோக்கினளாக, அவளுடைய மலர் முகமும் ஒளி நுதலும் வாட் கண்ணும் பன்முறை மனங் குளிரக் கண்டு அவன் மனம் மகிழ்ந்தான். அவனுடைய உயர் தோளும் விரி மார்பும் தடக்கையும் அவள் கண்கட்கு விருந்து செய்தன. இருவர் உள்ளமும் ஒன்று பட்டன. பின்பு அவன் அவணின்றும் நீங்கவே, அவன் உருவம் மறையுங்காறும் அவள் அவனையேநோக்கி நின்றாள். மறைந்தபின் அவள் தன் உயிர்த் தோழியை நோக்கி, "தோழி, இவன் மகனோ?" (அகம். 48) என்றாள். "அதில் தடை என்ன?" எனத் தோழி வினவெதிர் வினவ, "இல்லை, கேட்டேன்" என முறுவலித்தாள், இத்தமிழ் மகள். இஃது ஒரு திறம்.

ஒருகால், தமிழ்ச் செல்வி யொருத்தி ஆயமகளிருடன் மலைச் சுனைக்குச் சென்று அதன் நீரிற் படிந்து விளையாடுங்கால் அதன் கண் சிறிது சேய்மையில் ஆழத்தில் பூத்திருந்த தாமரைப் பூவைப் பறிக்க முயன்றாள்; அப்போது தமிழ்ச் செல்வத் தோன்றல் ஒருவன் போந்து அதனை நீரில் நீந்திச் சென்று பறித்துத் தந்தான். அவ்வுதவி வாயிலாக அவள் உள்ளத்தே அவன்பாற் காதலன்பு தோன்றிற்று; பிறிதொரு கால், இம் மகளிர் பறித்த பூக்களை மிக அழகாக விரைவில் மாலை தொடுத்து உதவினான்; அவர்கள் வைத்து விளையாடிய பாவைக்குத் தான் முடியில் அணிந்திருந்த பூங் கண்ணியை எடுத்துத் தந்தான். அதனாலும் அவட்கு அவன்பால் காதல் பிறந்தது. (நற். 73)

மற்றொருபோது தமிழ்ச் செல்வி தன் தோழியருடன் தினைப் புனத்தேயிருந்து அத் தினைக் கதிரைக் கவர வரும் கிளிகளை ஓப்பிக் கொண்டிருந்தாள். அருகே மலைச் சாரலில் மூங்கில்கள் வளர்ந்து தழைத்து நீண்டிருந்தன. கோடைக் காற்று வீசவும் மூங்கில்களில் தோன்றியிருந்த துளைவழிச்சென்ற காற்றால் குழலோசை யெழுந்தது. மலையருவி வீழ்வது முழவு முழக்குப் போல்வதாயிற்று. ஆங்காங்கே பூத்திருந்த பூக்களின் தேனுண்ட வண்டினம் யாழ்போல இசைத்தன. மந்திகள் பாறைமேலிருந்து இவ்விசைகேட்டு மருண்டு இருந்தன. ஒருபால் மயிலொன்று தன் அழகிய தோகையை விரித்துக் கூத்தாடும் விறலிபோல் ஆடலுற்றது. இக்காட்சி விழாக்காலத்தே குழல் இயம்ப முழவு முழங்க யாழ் இசைப்ப மக்கள் இருந்து காண, விறலியர் கூத்தாடும் இனிய தோற்றத்தை நல்கிற்று. இதுகண்ட தமிழ்ச்செல்வி தானும் அவ்விசையின்பத்தைத் துய்த்துக்கொண்டு நின்றாள். அவ்விடத்தே ஒரு தமிழ்ச்செல்வன் வில்லும் அம்பும் கொண்டு யானை வேட்டம் வந்தவன் இவள்பால் வந்து “யானை வந்தது கண்டீரோ? அஃது எவ்வழிச் சென்றது? கண்டதுண்டேல் கூறுமின்” என்று வினவினான். அவனைத் தமிழ்ச்செல்வி கண்டு காதலுறுகின்றாள் (அகம். 82). இஃது ஒரு திறம்.

இனி, இவ்வண்ணமேயன்றி, வேறு வகையாலும் காதலன்பு தோன்றுவதுண்டு. செந்தமிழ்ச் செல்வி யொருத்தியின் காதலொழுக்கத்தை உணர்த்தும்வாயிலாகக் கபிலர் கூறுகின்றார்: அது குறிஞ்சிப் பாட்டு என்ற பெயரால் பத்துப்பாட்டு என்ற தொகை நூலுள் காணப்படுகிறது. அதன்கண், தமிழ்ச்செல்வி ஒருத்தியை அவளுடைய தாய்,

"துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோள் சிறுதினைப் படுபுள் ஓப்பி
எற்பட வருதியர்"

என்று சொல்லிவிடுக்கின்றாள். அவளும் தன் தோழியருடன் தினைப் புனம் சென்று, அங்கே அமைக்கப்பட்டிருந்த பரண்மீது இருந்து கொண்டு,

"தழலும் தட்டையும் குளிரும் பிறவும்
கிளிகடி மரபின ஊழூழ் வாங்கி"

புனங்காவல் புரிந்து வருகின்றாள். வருபவட்கு வெயில்வெம்மைமிக்கு வருத்தவே, அருவியிலும் சுனையிலும் நீராடி நனைந்த நெடுங்கூந்தலைப் புலர்த்திக்கொண்டு, ஆங்காங்குப் பூத்திருக்கும் ஆம்பல் காந்தள் அனிச்சம் குவளை குறிஞ்சி வெட்சி முதலிய பலவகைப் பன்னிறப்பூக்களைப் பறித்துத் தொகுத்துத் தழையும் கோதையும் புனைந்துகொண்டு அசோகமரமொன்றின் நிழலில் இருக்கின்றனள். இடையிடையே கிளியோப்புவதை மறக்கவில்லை. அந்நிலையில் தமிழ்ச்செல்வன் ஒருவன் தன் கையில்,

வண்ண வரிவில் ஏந்தி அம்பு தெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
இயலணிப் பொலிந்த ஈகை வான்கழல்
துயல்வருந் தோறும் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்கும் துன்னரும் துப்பின்
பகைப்புறம் கண்ட பல்வேல் இளைஞரொடு

அவ்வழியே வருகின்றான். அவனுடன் வேட்டை நாய்கள் வந்து அவளைச் சூழ்ந்து கொள்கின்றன. அவளோ அதுகண்டு அஞ்சி நடுங்குகின்றாள். உடனே அவன் அங்கே போந்து மென்மொழி சில கூறி அவளைத் தேற்றி அந் நாய்களையும் போக்கினான். தன்னை மருண்டு நோக்கிய அவளைப் பார்த்து நன் மதிப்போடு

"மடமதர் மழைக்கண் இளையீர், இறந்த
கெடுதியும் உடையேன்"

என்று சொல்லுகின்றான். இறந்த கெடுதி என்றது, அவன் செலுத்திய அம்பு பட்டு ஓடிவந்த மான் பன்றி முதலிய விலங்குகளைக் குறிப்பது.

அவன் கூற்றுக்குப் பெரு நாணத்தால் நாவெழாமையின் அவள் ஒரு விடையும் பகர்கின்றாளில்லை. அவன் மனம் திகைத்து,

"கெடுதியும் விடீராயின் எம்மொடு
சொல்லலும் பழியோ, மெல்லியலீர்"

என்று கேட்டு நிற்கின்றான். இருந்தாற் போலிருந்து கானம் கல்லென்று எதிரொலிக்குமாறு ஒரு பெரு முழக்கம் கேட்கிறது. சிறிது போதிற்குள்

"கார்ப் பெயல் உருமின் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை இருநிலம் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅம் செருக்கி மரம் கொல்பு
மையல் வேழம்"

ஒன்று மடங்கல் போல் எதிர் வருகின்றது. தமிழ்ச் செல்வி அது கண்டு அஞ்சி அலமந்து கைவளை யொலிப்பப் பதறி நாண் மறந்து விரைந்தோடி களிற்றின் வரவு நோக்கி நின்ற தமிழ்ச் செல்வனை யடைந்து நடுங்கி நின்றாள். அவளைத் தழீஇ நின்ற காளை கூரிய கணை யொன்றைத் தன் வில்லிடைத் தொடுத்து அக் களிற்றின் நுதலிற் செலுத்தினான். அதனால் அது புண்ணுற்று அயர்ந்து புறங்கொடுத்து ஓடிவிடுகிறது. செல்வியும் அவனைத் தழீஇ நின்ற கையை விடாது சிறிதுபோது நிற்கிறாள். அப் பெருந்தகையும் அவளை நோக்கி,

அஞ்சி லோதி, அசையல் யாவதும்
அஞ்ச லோம்புநின் அணிநலம் நுகர்குஎன
மாசறு சுடர்நுதல் நீவி நீடுநினைந்து

அவள் முகநோக்கிக் குறுநகை முகிழ்க்கின்ருன். அப்போது அவட்கு நாணும் உட்கும் தோன்ற அவள் சிறிது பிரியக் கருதவே அவன் அவளை விடாது தழீஇக் கொண்டு நிற்கின்ருன். பின்பு, அவன், தான் கொணர்ந்த அடிசிலை,

நின்னேடு உண்டலும் புரைவது என்றுஆங்கு
அறம் புணையாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி
அந்தீந் தேண்ணீர் குடித்தலின் நேஞ்சமர்ந்து

இனிதிருக்கின்ருன். பின்பு பொழுது சாய, அந்தி மாலை நெருங்கு கிறது. அதனைக் கண்டதும் அவன் தமிழ்ச் செல்வியின் கைகளைப் பற்றிக் கொண்டு,

"நுமர்தர,
நாடறி நன்மணம் அயர்கம் சின்னுள்
கலங்க லோம்புமின், இலங்கிழையீர் என

ஈர மொழிகள் சில கூறி அவளுடன் அவளிருக்கும் ஊர்க்கு வாயிலினுள்ள நீர்த்துறைக்கண் விடுத்து விட்டுத் தான் சென்று விடுகின்ருன். இஃது ஒரு திறமாகும்.

இனி, மேலே கூறியவாறன்றி இத் தமிழ்ச் செல்வி விளையாட்டிடத்தோ பிறண்டோ தனித்திருக்குங்கால் ஒரு தமிழ்ச்செல்வன் அவளைக் காண்பதும் அவள் அவனைக் காண்பதும் இருவரும் கருத்து ஒருமித்துக் காதலுணர்ச்சி எய்தப் பெறுவதும் உண்டு; அவ்வாறு எய்திய உணர்ச்சி, பிறிதொருகால் அவர்கள் தாமே தமித்துக்கண்டு அளவளாவலால் பெருகிக் காதலாய் மலர்ந்து ஒருவரை யொருவர் இன்றியமையாத நிலைமை பயந்து விடுகிறது. அப்போது, அவள், தான் அவனையின்றி அமையமாட்டாத் தன்மை யுடையளாதலை உணர்ந்து சொல்கிருள்.

மகப்பேற்றுக்குரிய தாய்மைப் பண்பு மகளிர்க்கு ஆடவரினும் விரைவில் தோன்றிவிடுதலின் அதற்கேற்ப மேற்கோடற்குரிய நல்லொழுக்கத்துக்கு அறிவு இன்றியமையாதாகிறது. அதனால் ஆண்மக்களினும் பெண்மக்கட்கு இளமையில் அறிவு வளர்ச்சிமிக்கும் வன்மைகொண்டும் விளங்குகிறது. ஆணுடல்போல அத்துணை வன்மையின்றிப் பெண்ணுடல் பெண்மைப்பண்புமிக்கிருப்பதால் உடலின் கூறுகிய இனம் பெருக்கும் உணர்ச்சி பெண்மையறிவின் வளர்ச்சிக்கும் வன்மைக்கும் ஒப்ப இராது சிறிது வலி குறைந்தேயுளது. அதனால் இனம் பெருக்கும் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் காதல் மகளிரிடத்து அவர் தம் உயிரறிவின் வன்மைக்கு அடங்கி யொழுகுகின்றது. அந்நிலைமை மகளிர்க்குப் பெருந்தகுதியாம் என்பது திருவள்ளுவர் கருத்து. "கடலன்னகாமம் உழப்பினும் மடலேறாப், பெண்ணிற் பெருந்தக்கது இல்" என்பதே இதற்குச் சான்று.

இவ்வியல்பிற்றாய காதலுணர்ச்சி எய்தப்பெற்ற தமிழ்ச் செல்வி, அதனைப்பிறர்க்கு எடுத்தோதும் பெற்றி அறிவுவழிநிற்கும் தன் பெண்மைக்கு இல்லாமையால் அதனை மறைத்தொழுகுவள். உணர்ச்சி உடல்வரைத்தாதலால் பசு மட்கலத்துள் நீர் பெய்து வைத்த வழி அது புறத்தே பொசிந்து காட்டுவது போலத் தானே தன் மெய்ப்பட்டு அரிதில் தோன்றுமாறு விளங்குவள். சொல்லால் கூறற்கு அறிவு வழியியங்கும் நாணம் தடுக்கின்றது. அதுபற்றியே, பெண்ணொருத்தியின் கூற்றில் வைத்து,

காமம் செப்பல் ஆண்மகற் கமையும்;
யானே, பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கி (நற். 94)

என்று இளந்திரையனார் எடுத்திசைக்கின்றார். காதலுணர்வின் நிறைவு காமம் என்ற சொல்லால் குறிக்கப் படுவது; கமம் என்பதுநிறைவுப் பொருளை உணர்த்தும் தமிழ்ச் சொல் என்பர் தொல்காப்பியர்; அதற்குக் "கமஞ்சூல் எழிலி," "கமஞ்சூல் மடநாகு" "கமஞ்சூல் மகளிர்"

என்பனவற்றைச் சான்று காட்டுவர். அதனால் காதலுணர்வின் நிறைவு காமம் எனப்படுவதாயிற்று; நட்புக்குரிய உணர்வும் அன்பும் நிறைந்த வழி அதனையும் காமம் என்பது தமிழ்வழக்கு; "காமம் செப்பாது கண்டது மொழிமோ" என்று சான்றோர் வழங்குவது காண்க. இச் சொல்லின் நலம் கண்டே பேச்சு வழக்கின்றிச் சான்றோர் இடையே நிலவும் குழூஉ மொழியாகிய வடமொழியின்கண் வடவர் எடுத்து அமைத்துக் கொண்டனர். இவ் வரலாறு அறியாதார் காமம் என்ற சொல்லைக் கேட்டவுடனே கொலைச்சொல் போல மருண்டு மனம் தடுமாறுவர். தமிழ்ச் சான்றோர் இதனை எடுத்து நன்கு பயில வழங்கினர். அது பற்றியே தமிழ் மகள், "காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்" என்று உரைக்கின்றாள்.

இவ்வண்ணம் பெண்மை தட்ப, மனத்தே காதல் கமம் கொண்டு ஒழுகுவதைத் தமிழ்ச் செல்வன் கண்டு, தன்பால் நிறையும் காதலால் அவளைத்தழுவி, காதலின் தோற்றம் கூறுவானாய்,

"யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே" (குறுந். 40)

என்று அவட்குக்கூறுகின்றான். அவளின் நீங்கித் தனித்திருக்குங்கால் அவளது நினைவே மிகுந்து அவன் உளம் மெலிந்து வருந்துகிறான்; அம்மெலிவு கேட்கும் நண்பனுக்குத் தன் ஆண்மைப் பண்பால் வலியுற்றுத் தன் காதலை நன்கு உரைக்கின்றான். தனக்கும் செல்விக்கும் பிறந்துள்ள காதலின் திறத்தைச் சுருங்கக்காட்டி,

"கேளிர் வாழியோ, கேளிர்; நாளும்என்
நெஞ்சு பிணிக்கொண்ட அஞ்சி லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரின் (குறுந். 208)
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலேன் யானே"

என்று கூறுகின்றான். பிறவிடத்தும் அவளது "கதுப்பயல் விளங்கும் சிறுநுதல் புதுக்கோள் யானையிற் பிணித்தற்றால் எம்மே" (குறுந். 128) என்றும், கொடிச்சி கையகத் ததுவே பிறர் விடுத்தற் காகாது பிணித்த என்னெஞ்சே" (நற். 95) என்றும் பலப்பலகூறி அவன் தான் அவளை இன்றியமையாக் காதலனுதலைப் புலப்படுத்துகின்றான்.

இவ்வண்ணம் தமிழ்ச்செல்வர்கள் தம்மில் தாமே தமித்துக் காண்பதே பெரும்பான்மை. தமிழ் மகள் முதற் கண் தோழியர் கூட்டத்திடையே நின்று தமிழ் மகனைக் காண்பதும் காதலுறுவதும் சிறுபான்மையாகும். தனித்துக் கண்டு காதலெய்தும் மாண்புடைய இத் தமிழ் மகளிர் தம்செய்கையின் அருமைப் பாட்டினையும் திருமணத்தின் சிறப்பினையும் உணராதவரல்லர்.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங் குரைய கலம்கெடிற் புணரும்;
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொன்மருங் கறிஞர்" (குறிஞ்சிப். 13-8)

என்றும்,

"கொடுப்பின்நன்கு உடைமையும் குடிநிரல் உடைமையும்
வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது
எமியேம் துணிந்த ஏமம் சால் அருவினை" (குறிஞ்சிப். 30-29)

என்றும் இம் மகளிர் நிகழ்த்தும் உரைகளை நோக்கின் இவர்கள் காதலின் சிறப்பையும் கடிமணத்தின் குறிப்பையும் பிறவற்றையும் நன்குணர்ந்திருத்தல் இனிது விளங்குகின்றது.

# ஆற்றங்கரை பண்பாடு

திரு, டாக்டர் மா. இராசமாணிக்கனுர் தமிழ்ப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

## மருதத்தின் மாண்பு

மலையும் மலைசார்ந்த இடமாகிய குறிஞ்சி நிலத்தில் மனிதன் மிகவும் உழைத்து உணவு தேடவேண்டும்; விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி உண்ண வேண்டும்; பஞ்சு அங்குப் பயிராகாத காரணத்தால் பருத்தி ஆடைகளை எளிதில் பெறமுடியாது; அதனுல் தழைகளையும் மரப்பட்டைகளையும் பழைய மலைநாட்டு மக்கள் உடுத்துக் கொண்டனர், வயிற்றுக்கு உணவு தேடுவதிலேயே பெரும் பொழுது கழிந்ததனுல் பண்டைக் குறிஞ்சிநில மக்களிடம் ஓய்வு கிடைக்க வழியில்லை; உயர்ந்த நாகரிகம் தோன்ற வழியில்லை; எனவே, நாகரிகத்தின் தலை மணியாக விளங்கும் பண்பாடும் சிறந்துவிளங்க முடியாத நிலைமை இருந்தது. இன்றும் குறிஞ்சிநில மக்களிடம் இந்நிலைமை இருந்து வருகிறது.

காடும் காடுசூழ்ந்த இடமுமாகிய முல்லை நிலத்தில் பசும்புல் வெளிகள் உண்டு. அங்கு வாழ்ந்த மக்கள் ஆடு மாடுகள் மேய்த்து அவற்றின் பயன்களான பால், தயிர் முதலியவற்றைப் பிற நிலங்களில் விற்றுத் தமக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று வாழ்க்கை நடத்தினர். ஆடவர் கால்நடைகளை மேய்க்கும் தொழிலும் பெண்டிர் மோர் முதலியவற்றை ஆக்குவதிலும் விற்பதிலும் பெரும் பொழுதைச் செலவிட்ட காரணத்தால், அவர்களுக்கும் ஓய்வு இல்லாதிருந்தது. எனவே இவர்களிடமும் உயர்ந்த கலைவளர்ச்சியும் சீரிய பண்பாடும் தோன்ற வழியில்லை.

ஒன்றும் விளையாத பாலை நிலத்தில் வாழ்ந்த மக்கள் வழிப்போக்கரைக் கொள்ளையடித்து வாழ்ந்தனர்; அங்குமிங்கும் அலைந்து விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி வாழ்ந்தனர். இவர்களுக்கும்

அமைதியான வாழ்க்கை இல்லை. அதனால் பாலை நிலத்திலும் உயர்ந்த நாகரிகமும் அதன் கனிவாகிய பண்பாடும் சிறந்த முறையில் தோன்ற வழியில்லை.

உயிருக்குத்துணிந்து திரைகடலோடி மீன்பிடித்து வாழ்ந்த நெய்தல் நிலமக்கள் வாழ்க்கையிலும் ஓய்வு இல்லை. எனவே, கல்வி வளர்ச்சி அரிதாயிற்று. அதனால் நாகரிக வளர்ச்சியும் பண்பாட்டு வளர்ச்சியும் அங்கு ஏற்படவில்லை.

இந்நான்கு நிலங்களிலும் வேறுபட்டது மருதநிலம். அந்நிலம் ஆற்றுப் பாய்ச்சல்உடையது. மருதநில மக்கள் ஆற்றுநீரைப் பல கால்வாய்கள் வழியாகக் கொண்டுசென்று வயல்களுக்குப் பாய்ச்சினர்; தென்னை, மா, முதலிய மரங்களைக்கொண்ட சோலைகளை அமைத்துக் கொண்டனர். நெல் கரும்பு முதலியவற்றைப் பயிராக்கினர்; குளங்களையும் ஏரிகளையும் அமைத்து நீரைத் தேக்கிக் கொண்டனர். மருத நிலம் முழுவதும் நீர்ப்பெருக்கால் வளம் பெற்றது. நீர்வளம் உண்டானதால் நிலவளம் உண்டாயிற்று. வயலில் வேலைசெய்ய ஆட்களும் கிடைத்தனர். மாடுகள் வயிறுரப் புல்மேய்ந்து உழுதொழிலில் ஈடுபட்டன. நீர் வளத்தால் பண்பட்ட நிலம் சிறு முயற்சியாலேயே சிறந்த விளைச்சலை நல்கியது. மருதநில மக்கள் மனக்குறை யில்லாமல் உண்டு மகிழ்ந்தனர்; ஆடினர்; பாடினர். அவர் தம்ஆட்டத்திலிருந்து ஆடற்கலையும், பாட்டிலிருந்து பாடற்கலையும் தோன்றின; பின்பு ஓவியம் சிற்பம் நாடகம் முதலிய பலகலைகள் தோற்றமாயின. மனிதன் வயிறுரஉண்டு மகிழ்ச்சி கொள்ளும் பொழுதுதான், அவனது உள்ளத்திலிருந்து பெருக்கெடுத்துஓடும் கலையுணர்வும் வெளிப்படும். கவலையுற்றநிலையில் உணவு இல்லாத பொழுதில் கலை உணர்ச்சி தோன்றாது; சிறிது தோன்றினும் வளராது.

> "மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
> தானம் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சோல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
> பசிவந் திடப்பறந்து போம்"

என்பது பெரியோர் அனுபவ வாக்கன்றோ?

## மருதத்தில் கலை வளர்ச்சி

மருத நிலத்தில் நிலங்களை உடைய பெருமக்கள் வாழ்ந்தனர். அவர்கள் நிலத்தை உழவில்லை. நிலம் இல்லாதமக்கள் அப் பெருமக்களின் நிலங்களை உழுது வாழ்ந்தனர். உழுத பணியாள் ஒரு பங்கும் நிலம் உடையவர் பெரும் பங்கும் எடுத்துக்கொண்டனர். அப்பெருமக்களைப் போலவே உயர்ந்த வணிகரும் ஓய்வு பெற்றிருந்தனர். அவர் தம் கவலையற்ற வாழ்வில் கலையுணர்ச்சி தோன்றியது. ஆடல் பாடல் முதலிய கலைகள் அவர் தம் இன்பப் பொழுது போக்குக்காக வளர்க்கப் பட்டன. அரசர்களும் இக்கலைகளை வளர்த்தனர்; அரண்மனைகளில் சிற்பங்கள் அமைக்கப் பெற்றன; ஓவியங்கள் தீட்டப் பெற்றன; இசை அரங்கும் நாடக அரங்கும் கட்டப்பெற்றன. அரசர்க்காடும் கூத்து என்ற முறையில் தனிக் கூத்துமுறை வளர்ச்சி பெற்றது; பொதுவியல் என்ற பெயரில் பொதுமக்களுக்குரிய கூத்தும் வளர்ச்சி பெற்றது.

மருதநில மக்கள், "நாளை உணவுக்கு என்ன செய்வோம்" என்ற கவலை இல்லாதவர் ஆதலின் அந் நிலப் பெருமக்களைப் போலவே இசை முதலிய கலைகளில் ஈடுபடலாயினர்; கோவில் விழாக்களின் போது இசை அரங்குகளும் நாடக அரங்குகளும் நடன அரங்குகளும் அமைக்கப்பெற்றன. பொதுமக்கள் இவற்றைப் பேணி வளர்க்க முற்பட்டவுடன் பயிற்சிபெற்ற இசை வாணரும், நடிகரும், நடன மகளிரும் தோன்றலாயினர்; தோன்றிப் பெருகலாயினர்; இசைபற்றிய நூல்களும், நடனம் பற்றிய நூல்களும், நாடகம்பற்றிய நூல்களும் தோற்றமெடுத்தன; பலவகை இசைக் கருவிகள் வழக்கிற்கு வந்தன. இசை ஆசிரியர், நாடக ஆசிரியர், நடன ஆசிரியர், குழலாசிரியர் என்று இசைக்கலை பற்றிய ஆசிரியர் பலர் தோன்றினர்; இவ்வாறு ஓவியக் கலையும் சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றது. அரசன் முதல் ஆண்டி ஈறாக இருந்த எல்லாரையும் இக் கலைகள் கவர்ந்தன. இக்கலை அரங்குகளை அமைப்பதற்காகவே கோவில்கள் மிகப் பெரிய அளவில் கட்டப் பெற்றன. கோவில் திருச்சுற்றில் இசை, நடனம், நாடகம் முதலியவற்றிற்குத் தனித்தனி மண்டபங்கள் இருந்தன. நல்ல காற்றோட்டமும் அகற்சியும் கொண்ட திருச்சுற்றில் பொதுமக்கள் இருந்து கலைநிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர்.

## இசையின் சிறப்பு

இசை கற்றவரையும் மற்றவரையும் மகிழ்விக்க வல்லது. கொடிய விட நாகமும் இசைக்குக் கட்டுப்படுகிறது. தினைக்கதிர்களை உண்ண வந்த யானை ஒன்று குறத்தியின் இசையில் மயங்கித் தினைக்கதிர்களையும் உண்ணாமல் உறங்கியது என்னும் செய்தியைப் பழம் பாடலொன்று குறிக்கின்றது: கபிலை ஏற்றக் காளைகள் உழவன் பாடும் பாட்டைக் கேட்டுக்கொண்டே நீர் இறைக்கின்றன. பண்டங்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளில் பூட்டப்பெற்ற மாடுகள் வண்டிக்காரரது பாட்டோசையில் ஈடுபட்டுத் தம்துன்பத்தைமறந்து நடத்தலை நாம் காண்கிறோம். குழந்தை தாயின் தாலாட்டுப் பாடலில் ஈடுபட்டு உறக்கங்கொள்கிறது. இவ்வாறு இசை எல்லா உயிர்களையும் உருக்க வல்லது;

## இசையும் கூத்தும்

நம் முன்னோர் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழிசைகளைக் கண்டறிந்தனர். பின்பு அவற்றைப் பலவாறு பிரித்தனர்; ஒவ்வொரு நிலத்திற்கு முரிய பண் வகைகளையும் இசைக் கருவிகளையும் கண்டறிந்தனர். இவற்றின் விவரமெல்லாம் சங்க நூல்களிலும் பழைய உரைகளிலும் காணலாம். பல்லவர் காலமாகிய தேவாரகாலத்திலும் பிற்காலச் சோழர் காலத்திலும் தமிழிசையும் இசைக்கருவிகளும் வழக்கிலிருந்தன என்பதை இலக்கியத்தாலும் கல்வெட்டுக்களாலும் அறிகின்றோம். நம்முன்னோர் இசையால் இறைவனை வழிபட்டனர். இசையில் வல்ல பாணரையும், பாடினியரையும் நன்கு ஆதரித்தனர்.

இவ்வாறே பெருங் கோவில்களிலெல்லாம் ஆடல் மகளிர் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு நிலமும் வீடும் வழங்கப்பட்டன. அவர்கள் கவலையற்றநிலையில் நடனக்கலையை நன்குவளர்த்தனர். கோவில் விழாக்களிலும் பிற பொது நிகழ்ச்சிகளிலும் தங்கள் கலைத் திறனைக் காட்டினர்.

"நெய்திரள் நரம்பில் தந்த மழலையின் இயன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல
அய்யநுண் இடையார் ஆடும் நாடக அரங்கு கண்டார்"

என்னும் கம்பரது செய்யுள் சோழர் காலத் தமிழ் நடிகையரது நடிப்புத் திறனை நன்கு காட்டுகிறது.

## கட்டடக் கலை வளர்ச்சி

பல்லவர் காலத்தில் செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவற்றால் கோயில்களும் பிற கட்டடங்களும் கட்டப் பெற்றன. சோழர் காலத்தில் கருங்கற்களைக் கொண்டு மிகப்பெரிய கோவில்களும் பிற கட்டடங்களும் அமைக்கப் பெற்றன; நாயன்மாரால் பாடப்பட்ட செங்கற் கோவில்களெல்லாம் சோழர் காலத்து கற்றளிகளாக மாறின. என்றும் நிலை பெற்றுள்ள ஆண்டவனுக்கு உறுதியான கற்களைக் கொண்டு நம் முன்னேர் கோவில் கட்டினர்; இவ்வாறே மன்னன் கோவிலையும் கற்களால் மாண்புற அமைத்தனர்.

நாயன்மார் காலத்தில் மண்ணுலும் சுதையாலும் செய்யப்பட்டிருந்த திருவுருவங்கள் சோழர் காலத்தில் கற்களால் அமைக்கப் பெற்றன; இவ் வுருவங்கள் விமானங்கள் மீதும் கோபுரங்கள் மீதும் இன்றும் அழகொழுகக் காட்சியளிக்கின்றன; பல்லவர்காலக் கட்டடக் கலை சோழர் காலத்தில் உயர்நிலையைஅடைந்தது. இவ்வாறே பல்லவர்காலச் சிற்பக்கலை சோழர் காலத்தில் நன்கு வளர்ச்சி பெற்றது. ஓவியக் கலையும் படிப்படியாகச் சிறப்புற்றது.

## முயற்சியும் உயர்ச்சியும்

பழந்தமிழ்மக்கள் ஆற்றின்நீரை நன்கு பயன்படுத்தி உழு தொழிலைச் செய்தனர்; தங்களுக்குத் தேவையான எல்லாவகை உணவுப் பொருள்களையும் விளைத்துக்கொண்டனர்; கடல்படு பொருள்களையும் மலைபடு பொருள்களையும் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொண்டனர்; தமிழர் நெசவுத் தொழில், கொல்லத்தொழில், தச்சுத்தொழில் முதலிய எல்லாத் தொழில்களிலும் சிறந்து விளங்கினர். பட்டாலும் பருத்தியாலும் எலிமயிராலும் சங்ககாலத்தில் ஆடைகள் நெய்யப்பட்டன. பூவேலைகள் செய்யப்பெற்ற மிக மெல்லிய ஆடைகளும் நெய்யப்பெற்றன. கற்கள் பதித்து நகைகள் செய்வதும்; பொன்னை உருக்கி நகைகள் செய்வதும் ஆகிய இருவகை வேலைகளும்

மிக உயர்ந்த முறையில் செய்யப்பட்டன. இவ்வாறே ஒவ்வொரு கைத்தொழிலும் வளமுற வளர்ந்து வந்தது. இக் கைத்தொழில்களால் உருப்பெற்ற பொருள்களுள் தம் தேவைக்கு மேற்பட்டவற்றை அக்காலத் தமிழ்மக்கள் பிறநாடுகளுக்கு அனுப்பிவந்தனர். இக் கைத்தொழிற் பொருள்களோடு உணவுப் பொருள்களையும் மலைபடுபொருள்களையும் கடல்படு பொருள்களையும் நம் முன்னோர் வெளி நாடுகளுக்கு அனுப்பினர்.

எருதுகள் மீதும் கோவேறு கழுதைகள் மீதும் பண்டப்பொதிகளை ஏற்றிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று தமிழ்வணிகர் உள்நாட்டு வாணிகம் செய்தனர்; "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்னும் உண்மையைத் தம் வாணிக அநுபவத்தால் பெற்றனர். தமிழ்நாட்டுக் கப்பல்கள் இந்நாட்டுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கீழைநாடுகளுக்கும் மேலைநாடுகளுக்கும் சென்றன. அயல்நாட்டுக் கப்பல்கள் தத்தம் நாட்டுப்பொருள்களை இங்கு இறக்குமதி செய்து இந்நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்துகொண்டு சென்றன. தமிழர் செய்த இக்கடல் வாணிகத்தால் பெரும்பொருள் ஈட்டினர். வணிகப் பெருமக்கள் 'இளங்கோக்கள்' என்று அரசரால் பாராட்டப் பெற்றனர்.

நிலக்கிழார்களும் வணிகப்பெருமக்களும் அரசர்க்கு உறுதுணையாக இருந்தனர். இவ்விருவகைப் பெருமக்களாலும் நாட்டில் கலை வளர்ச்சியும் அறச்செயலும் நலமுற வளர்ந்தன. மன்னன் ஆதரவினாலும் பொதுமக்கள் ஒத்துழைப்பாலும் நாகரிகமும் பண்பாடும் பருந்தும் அதன் நிழலும் போல வளர்ச்சியடைந்தன.

## அறச்செயல்

பிறர் துன்பப்படுதலைக் கண்டு உள்ளம்நெகிழ்ந்து அவர்க்கு உதவி புரிதல் பண்பாட்டின் தலை மணியாகும்; அற வுணர்வும் அறச்செயலும் பண்பாட்டை அளக்கும் கருவிகளாகும். வறுமையால் வாடிய புலவர்களுக்கு வரையாது வழங்கிய பொருளாளர் பண்பாட்டின் முகடு கண்

டவராவர். இவ் வருளாளர்களே வள்ளல்கள் என்று சொல்லப்படுவர். பாரி, பேகன், அதிகன், காரி, ஓரி, குமணன் முதலியோர் சங்க காலத்தில் வாழ்ந்த அருளாளராவர். தாம் கவிபாடிப் பெற்ற பொருளைத் தம் வறிய நிலையைப் போக்கத் தாமே வைத்துக் கொள்ளாமல், தம் வறிய சுற்றத்தாருக்கு மனமார வழங்கி மகிழ்ந்த புலவர் பெருமக்கள் பண்பாடு பெற்ற பெரியோராவர். வறுமையால் வாடி வந்தபுலவனுக்கு வாரி வழங்க ஒன்றும் இல்லையே என்று கவலை கொண்டு, "என் தலையைக் கொண்டு வருவோர்க்குப் பரிசு வழங்குவதாக என் தம்பி அறிவித்துள்ளான்; ஆதலால் என் தலையைக் கொண்டு செல்க," என்று கூறிப் புலவரிடம் தன்கைவாளைக் கொடுத்த குமணன் பண்பாட்டிற்கே ஓர் எல்லை என்று கூறலாம்.

மருதநில மக்கள் உணவுப்பஞ்சம் இல்லாதவர் ஆதலால், வந்த விருந்தினரை அன்போடு உபசரிக்கும் இயல்பினராக இருந்தனர். பாலாற்றங்கரை ஊர்களிலும் காவிரிக்கரை ஊர்களிலும் வையைக்கரை ஊர்களிலும் வளமாக வாழ்ந்த பெருங்குடி மக்களும் சிறுகுடி மக்களும் வந்த விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று அமுதூட்டி உபசரித்தனர் என்பதை நூல்களால் அறிகின்றோம். நம் முன்னோர் பசியின் கொடுமையை நன்கு அறிந்தவர்;

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கோல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூணணி மாதரோடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி"

என்பது சாத்தனர் வாக்கு.

"காணர் கேளார் கால்முடப் பட்டோர்
பேணு மாக்கள் பிணிநடுக் குற்றோர்"

முதலியவர்க்கு உணவு வழங்குவதே சிறந்த அறச்செயல் என்று அக் கால மக்கள் கருதினர். இக் கொள்கைப்படியே மாதவி பெற்ற மணி மேகலை காவிரிப்பூம்பட்டினத்திலும் காஞ்சியிலும் திருவறம் துணை யாக அன்னதானம் செய்தாள் என்று மணிமேகலை செப்புகின்றது. ஏழைகள் முதலியோர்க்கு உணவு கிடைக்க மதுரை முதலிய பெரு நகரங்களில் உணவுச் சாலைகள் இருந்தன என்பதைச் சங்க நூல்கள் சாற்றுகின்றன.

உலகத்தைப் படைத்துக்காத்து அழிக்கும் பேராற்றலைக் கடவுள் என்று நம்முன்னோர் கூறினர்; எங்கும் தங்கியிருக்கும் அப் பேராற் றலை இறை என்றழைத்தனர்; அஃது எங்கும் தங்கியிருப்பினும் வழி படுவதற்கு வசதியாக அதற்கென்று உருவங்களை அமைத்துக் கோவில் கட்டினர்; நாள்தோறும் பூசை நடைபெறச் செய்தனர்; திங்கள் தோறும் விழா நடத்தினர்; ஆண்டுதோறும் பெருவிழா நடத்தினர்; கோவில்களை அடுத்து மடங்கள் இருந்தன; அம்மடங்களில் சமயக் கல்வியில் தேர்ந்த முனிவர்கள் இருந்து பொதுமக்களுக்குச் சமய அறிவை ஊட்டினர்; மக்கள் இவ்வுலக வாழ்வுக்குப் பிறகு மறுவுலக வாழ்வை நன்முறையில் அடைவதற்குரிய வழி வகைகள் மடத்துத் தலைவர்களால் தெளிவாக்கப் பட்டன; கோவில்களில் அறநூல்களும் சமயநூல்களும் சிறந்த முறையில் படித்து விளக்கப்பட்டன; இத் தகைய சமய அறிவுரைகளால் உலகப்பற்றை ஓரளவு ஒழித்துச் சமய நெறி சார்ந்த நன்னெறியில் மக்கள் வாழ்ந்து வந்தனர்; இத் தகைய நல் வாழ்க்கையே ஒரு சமுதாய மக்களது பண்பாட்டின் உயர்ச்சி யைக் காட்டுவதாகும்.

---

# சிலப்பதிகாரம்—கானல் வரி

பண்டித-வித்துவான், தி. சங்குப்புலவர், கணக்காயர், செந்தமிழ்க் கல்லூரி,
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

## கானல் வரி (முகமில் வரி) பொருள் விளக்கம்.

கானல்வரி பாடத் தொடங்கினன் கோவலன். கானல்வரி என்பது கானல் எனப் பாடலில் வந்துள்ள மூன்று பாடல்கள். அவை முகமில் வரி எனவும் பெயர்பெறும். முதற்கவி "உட்கோள்" என்னும் துறை யமைந்தது. ஓர் தலைவன் தலைவியைக் கண்டான். ஐயுற்றுப் பின் தெளிந்தான். அவளது குறிப்பை அறிந்தான்; புணர்தற்கு நயந்தான்; அவ் விருப்பத்தால் அவனது உள்ளத்தில் எழுந்த கொள்கையைத் தானே தனக்குக் கூறுகின்றான். அதுவே "உட்கோள்" என்னும் துறைப் பொருளாகும்.

(1) நீர்த்துறையில் மேய்ந்த வலம்புரிச் சங்குகள் மணலில் வந்து படிந்து உழுத வரிவரியாகிய கோடுகளை, மலர்ப்பாரம் தாங்கிய புன்னை மரத்திலிருந்து கீழே உதிர்ந்த பூக்களும் மகரந்தப் பொடிகளும் மறைத்து விடும் சிறப்பு வாய்ந்த கானல் இது. இக் கானலில் நிற்கின்ற இக் கன்னியின் நிறைநிலாப் போன்ற ஒளி வீசும் வட்டமான முகத்தி லுள்ள நீண்ட கெண்டைமீனைப் போன்ற கண்களே எனக்குக் காம நோயைத் தந்தன; இந்நோய் வேறு மருந்தாற் போக்கமுடியாத நோய்; இந்நோயைத் தேமற்படர்ந்த மென்மையான இவளது கொங்கைகளே நீக்கும் எனக் கருதுகின்றேன். இக் கானலின் இயற்கையும் அதற்குத் தகுதியாகவே காட்சி தருகின்றது. எங்ஙனமெனில் சங்குகள் உழுத வரிகளைப் புன்னைப் பூந்தாது மறைக்கின்றது போலக் கண்கள் செய்த காமநோயைக் கொங்கைகள் நீக்குமென நம்புகின்றேன் எனத் தனக் குள் தானே கூறி மகிழ்ந்தான் தலைவன். கவியைப்படித்து இசை யின்ப மும் பொருளின்பமும் காண்க.

## கானல்வரிப் பாடல்

துறைமேய் வலம்புரி தோய்ந்துமணலுழுத
தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது
போர்க்குங் கானல்
நிறைமதி வாண் முகத்து
நேர்கயற்கண் செய்த
உறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே
தீர்க்கும் போலும். (1)

கானல்வரியின் இரண்டாவது கவியும் மூன்றாவது கவியும் "கழற்றெதிர் மறை" என்னும் துறையில் அமைந்திருக்கின்றன. ஓர் தலைவன் ஊழ்வினை வயத்தால் ஓர் சோலையிற் சென்று தலைவியைக் கண்டான். காதல்கொண்டான். காதற்குறிப்பையறிந்து அவளை கலந்து காதலின்பம் அறிந்தான். அத்தலைவியைப் பிரிந்தபின் காண்பது அருமையெனத் தெரிந்தான். அந்நாள்முதல் என்று காண்பேன் நான் இனி என்றே நினைத்து ஏங்கி யுடல் மெலிந்தான். பாங்கன் தலைவனைப் பார்த்தான். உடல் மெலிவதற்குக் காரணம்யாது? எனவினவினான். உண்மையை யொளியாமற்கூறினன். அப்போது பாங்கன் நீ ஓர்பெண்பொருட்டாக வருந்துவது உன் பெருமைக்குக் குறைவாகும் எனக் கழறினான். அவ்வாறு இடித்துக்கூறியதற்கு எதிர்மறையாகத் தலைவன் அப்பெண்ணின் அழகும் அவளது நற்குணங்களும் கூறி அவளை மறந்து நான் வாழவியலாது எனக் கூறினன். இதுதான் "கழற்றெதிர் மறை" என்ற துறையின் பொருளாகும். கவியின் பொருள் விளக்கம் வரைகின்றேன் காண்க.

(2) தலைவன் பாங்கனைநோக்கி என்னுருயிர்த் தோழ! பலவகையான பூக்களின்மணம் கமழ்கின்ற கானலிற் கழிக்கரையில் நின்றாள் ஓர் கன்னி. அவள் கொழுப்பு நிறைந்த மீன்களை வெயிலிற்காயும்படி போட்டி

ருக்கும் இடத்திற் பறவைகளையோட்டுவதற்காக நிற்பவள்எனத்தெரிந் தேன். வண்டுக் கூட்டம் ஒலித்து மொய்க்கும் இளமையான நல்ல பூக் களை யுடைய ஞாழல்மரக் கொம்பைத் கையில்வைத்திருந்தாள். தீண்டி வருத்துந் தெய்வப் பெண்ணுகவே எனக்குக் காட்சியளித்தாள். அவள் கண் வலையிற் சிக்கிக் காதல்கொண்டு மெலிந்தேன். அப்பெண் அவ் விடத்தில் நிற்பாள்என முதலில் யான் அறியேன். அறிந்தால் அவ்வழி நான் செல்வேனு? செல்லமாட்டேன் அறியாதுசென்று மயங்கி உயிர் நீங்கும்நிலையில் இருக்கின்றேன் என்றான்.

(3) ஆருயிர்த்தோழ! அலை வீசுகின்ற நீர்ப்பெருக்கை யுடைய குளிர்ந்த கானலில் நின்றது கொடுமையான என்னுயிர் கவரும் இய மன். என்னைக் கொல்வதற்காக வேண்டிப் பெண்ணுருவங் கொண்டு கொலைசெய்யும் வேல்போன்ற நெடிய கண்களை யுடையதா யிருந்தது. வலையால் மீன் பிடித்து வாழ்கின்ற பரதவர் சேரியில் வலைகளை விரித்து உலர்த்தியிருக்கும் முற்றத்தில் நின்றது. மீன் உணங்கலைக் காப்பதற் காக நின்றது. மலர்களைக் கையில் ஏந்தியும் இருந்தது அக் கூற்றம். அவ்விடத்தில் அத்தகைய கொடுங் கூற்றம் இருக்குமென நான் முத லில் அறியேன். அறிந்தால் அவ்வழிச் செல்லாது வேறுவழியிற் சென் றிருப்பேன். அறியாது சென்று கண்டு உயிர் இழக்கும் நிலையில் இருக் கின்றேன் என்றான் தலைவன். பாக்களைப் படித்துப் பயன் காண்க.

### கானல்வரிப் பாடல்கள்

நிணங்கோள் புலாலுணங்க னின்றுபுள் ளோப்புதன்
றலைக் கீடாகக்
கணங்கோள்வண் டார்த்துலாங் கன்னிநறு
ஞாழல் கையிலேந்தி
மணங் கமழ் பூங்கானல்
மன்னிமற் றண்டோர்
அணங்குறையு மென்ப தறியேன் அறிவேனேல்
அடையேன் மன்னே. (2)

வலைவாழ்நர் சேரி வலையுணங்கு முன்றின்
மலர்கை யேந்தி
விலைமீ னுணங்கற் பொருட்டாக வேண்டுருவங்
கொண்டு வேறோர்
கொலைவே னெடுங்கட் கொடுங்
கூற்றம் வாழ்வது
தலைநீர்த் தண்கான லறியே னறிவேனேல்
அடையேன் மன்னே. (3)

## நிலைவரி. பொருள்விளக்கம்

காணீர், காணீர் என வந்து முடிவில் அதுவே அதுவே எனநிற்கும் பாடல்கள் மூன்றும் நிலைவரியாம். இம் மூன்றிலும் ஒருதுறைப் பொருளே யமைந்திருக்கிறது. தனியிடத் தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைவன் காமநோய் மிகுந்து தன் வருத்தத்தைத் தானே கூறுவது அதன் பொருள். தலைவியின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் தனக்குக் காமநோயைவிளைத்ததாகக் கூறுகிறான் தலைவன். கவியின் பொருள் விளக்கம் காண்க.

(1) தலைவன் தலைவியைத் தனியிடத்திற் கண்டான். காதல் கொண்டான். எழிலைக்கண்டு மயங்கினன். அவளை நோக்கி முன்னிலையாகக் கூறாது படர்க்கையாகக் கூறுகின்றான். இம் மங்கையின் முகத்தைக் காண்பீர்? இது நிறை நிலாத்தான்; முகம் அல்ல. இந் நிலாவில் கண்ணாகிய கயல் மீனும் எழுதப்பட்டிருக்கிறது. புருவமாகிய வில்லும் எழுதப்பட்டிருக்கிறது. கூந்தலாகிய மேகமும் எழுதப்பட்டிருக்கிறது. மன்மதன் செயல் எழுதப்பட்டிருக்கிறது. பலவகையான நகைகளும் புனைந்து முற்றுப் பெற்றுப் பரதவர் சிற்றூரில் வாழ்கின்றது. அழகிய இடம் பரந்த வானத்திலிருந்து வந்து இராகு என்னும் பாம்புக்குப் பயந்து முகம் ஆகிய உருவம்கொண்டு ஒளித்து வாழ்கிறது என்று கருதுகிறேன். நன்றாய் ஆய்ந்து பாருங்கள் அறிஞர்களே என்று கூறினன்.

(2) குருதிதோய்ந்தவேல் போன்ற கண்ணைப் பாருங்கள். கடுமையான இயமனேதான். கண்கள் அல்ல. கடலில் மீன் பிடித்து வாழும் பரதவர்கள் சிற்றூர்க்கு ஓர் இளமையான மெல்லிய சாயலையுடைய பெண்ணுருவங்கொண்டு வந்திருக்கின்றான் கொடிய இயமன். கையில் வளையல்கள் ஒலிக்கும்போதெல்லாம் இரண்டு பக்கத்திலும் செல்லுகின்றன இவளது கண்கள். கொடுங் கூற்றுவனாகவே எனக்குத் தோன்றுகிறது இவள் கண் என்றும் கூறி வருந்தினன்.

(3) தீண்டி வருத்துந் தெய்வப்பெண்தான் இது. பெண்ணுருவமோ காண்பீர். புலால் நாற்றத்தையுடைய மீன் உணங்கலைக் கவர வரும் பறவைகளை யோட்டி நிற்கிறது. கண்டவர்க்கு எல்லாம் காம நோயை யுண்டாக்கும் இவ்வுருவம். அடும்பு மரங்கள் வளர்ந்திருக்கும் குளிர்ந்த கானலில் நிற்கிறது. செறிந்த ஐந்து வகையாக முடிக்குங் கூந்தலுடன் ஓர் பெண் வடிவமுங் கொண்டு நிற்கிறது. இது தெய்வப் பெண் தான் என்று கருதுகிறேன் என்று கூறி வருந்தினன் தலைவன். கவியைப் படித்துப் பொருள்கண்டு களிப்பெய்துக.

## நிலைவரிப் பாடல்கள்.

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே. (1)

எறிவளைக ளார்ப்ப விருமருங்கு மோடும்
கறைகெழுவேற் கண்ணோ கடுங்கூற்றங் காணீர்
கடுங்கூற்றங் காணீர் கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழு மென்சாயல் மகளா யதுவே (2)

புலவுமீன் வெள்ளுணங்கற் புள்ளோப்பிக் கண்டார்க்கு
அலவநோய் செய்யு மணங்கிதுவோ காணீர்
அணங்கிதுவோ காணீ ரடும்பமர் தண்கானல்
பிணங்குநே ரைம்பாலோர் பெண்கொண் டதுவே (3)

## முரிவரி—பொருள் விளக்கம்

அடுத்துள்ள மூன்று செய்யுட்களும் முரிவரி எனப் பெயர் பெறும், முரிவரி என்பது முடுகு சந்தமாகப் பாடுவது எனத் தெரிகிறது. இவைகள் "பாங்கனுக்குத் தலைவன் உற்றது உரைத்தல்" என்னும் துறைப் பொருள் அமைந்திருக்கின்றன. தலைவன் ஓர் நாள் ஓர் பூஞ்சோலையில் தனித்து நின்ற தலைவியைக் கண்டான்; ஊழ்வயத்தால் இருவரும் ஒரு மனப்பட்டுக் கூடிப் பிரிந்தனர். பின்பு தலைவன் அக்காதலியைக் காண வேண்டும் என்ற வேட்கையால் உடல் மெலிந்தான். நாளுக்குநாள் நலிவதைப் பாங்கன் கண்டு உன்உடல் மெலிவிற்குக் காரணம்என்ன? என வினவினன். தலைவன் இன்ன இடத்தில் இத் தன்மையான ஓர் பெண்ணைக் கண்டு காதல் கொண்டேன். அதுவே என் உடல் மெலிவிற்குக் காரணம் எனத் தான் உற்றது உரைத்தான்.

(1) காவிரியாற்றுக் கரையில் ஓர் பூஞ்சோலை யுள்ளது. அங்குப் பலவகையான மலர் பூத்து மணலில் உதிர்ந்து கிடக்கின்றன. அம்மலர் மணம் புதுமையாகப்பரவி எங்கும்கமழ்கின்றது. அவ்வாறு மணங் கமழும் மணல் பரந்த இடமே அப்பெண் நின்றஇடம். அவளது குற்றமில்லாத சிறந்த குதலைச்சொற்கள்; பருத்த இளமையான அழகியமுலைகள்; நிறை நிலாப்போன்ற வட்டமான ஒளிபொருந்திய முகம்; வளைந்த வடிவத்தை யுடைய இரண்டு வில்லைப் போன்ற புருவங்கள்; ஓவியராலும் எழுத முடியாத மின்னல் போன்ற இடை ஆகிய உறுப்புக்களே எனக்குக் காம நோயைத் தந்தன. அந்நோயால் உடல்மெலிகின்றேன் என்று கூறினன் தலைவன்.

(2) அலைகள் பரந்துவந்து மோதுகின்ற நீர்த்துறை உள்ளது; அத் துறையின் அருகே சிறந்த வெண்மணல் பரவிய இடம் உள்ளது. அவ்விடத்தில் நல்ல பூக்கள் மலர்ந்து மணங் கமழும் ஓர் சோலை இருக்கிறது. அச் சோலையில் தான் அம்மங்கை நின்றாள். நான் கண்டேன். அவளது மலர் புனைந்து மணம் வீசும் கூந்தலும், முழு நிலாப்போல

ஒளிர்கின்ற வட்டமான முகமும், இரண்டு கெண்டைமீன் சேர்ந்தது போலத் தோன்றும் கண்களும் இக் காதல் நோயைத் தந்தன. அதனுல் உடல் மெலிகின்றேன் என்று கூறினன் தலைவன்.

(3) அலையால் அடிக்கப்பட்ட சங்குகள் வந்து தங்கியிருக்கும் நீர்த்துறை; அந் நீர்த்துறையின் அருகே பலவகை யரும்பு மலர்ந்து புதுமணம் கமழும் பூஞ்சோலை உள்ளது; அப் பூஞ்சோலைதான் அக் கன்னி நடந்து திரிந்த இடம்; அவளுடைய நாணல் முளை போன்று வெண்மையாக விளங்கும் பற்களும், முழு நிலாப்போல ஒளிவட்ட முள்ள முகமும், இளமையான கொங்கைகளுமே எனக்கு இக் காம நோயைத் தந்தன, மெலிந்தேன் என்று கூறினன் தலைவன். பாடலைப் படித்துக் காண்க.

## முரிவரிப் பாடல்கள்

போழிறரு புதுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வன முலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
யெழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே (1)

திரைவிரி தருதுறையே திருடணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகய லிணைவிழியே யெனையிடர் செய்தவையே (2)

வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவ டிரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
இளையவ ளிளமுலையே யெனையிடர் செய்தவையே (3)

# தமிழில் கலைச் சொல்லாக்கத்திற்கு
# எழுத்துப் பெயர்ப்புச் சிறந்ததா? மொழி பெயர்ப்புச் சிறந்ததா?

திரு. எஸ். அல்லா பிச்சை, தியாகராசர் கல்லூரி, மதுரை.

(64-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழ்" என்றாலே "இனிமை" என்றுதான் பொருள். சிந்தாமணி இயற்றிய திருத்தக்க தேவர் தம் காவியத்தின் ஓரிடத்தே, இனியசாயலையுடைய மகளிரைத் "தமிழ் தழீஇய சாயலர்" என்று கூறி இருப்பதை நம் நினைவுக்குக் கொண்டுவரலாம். தமிழ்—இனிமை என்பதனால் தமிழ்மொழி—இனிய மொழி என்றாகிறது. ஒரு பொருளினுள்ள ஒவ்வொரு அணுவும் இனிய சுவையுடையதாக இருந்தால் தான் அப்பொருள் இனிதாக இருக்க இயலும். அதுபோலவே ஒரு மொழி இனியதாக இருக்க வேண்டுமானால் அம் மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லும் இனிய (ஓசை உடைய) தாக இருக்கவேண்டும்.

சொற்களை மட்டும் கடன்வாங்கித் தமிழிலுள்ள எழுத்துக்களைக் கொண்டே அவற்றைப் பெயர்த்துக் கொண்டால் என்ன என்ற ஐயப்பாடும் எழலாம். அத்தகைய ஐயப்பாட்டையும் போக்கிக் கொள்ள முயல்வோம்.

Philosophy என்ற சொல்லை எழுத்துப் பெயர்ப்புச் செய்தால் 'பிலாசபி' (Pilosophy) என்றாகும். தமிழில் 'பிலாசபி' என்று பயின்று, அதையே 'உலகப் பொதுக் கலைச் சொல்' என்ற நினைப்பில், ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தும்போது தமிழில் பயின்றபடியே Pila–sapy என்று உச்சரித்துக் கூறினால் அச் சொல்லைத் தமிழ்மொழி பயிலாத மக்களால் புரிந்துகொள்ள முடியுமா? 'பிலாசபி' என்ற சொல்லை தமிழ்ச் சொல்லாகக் கொண்டால் அச் சொல்லில் கொஞ்சமாவது இனிமை கலக்குமா?

கலைச் சொற்களல்லாத எத்தனையோ பிறசொற்கள் தமிழில் எழுத்துப் பெயர்ப்பாக வந்துசேர்ந்து தமிழின் இனிமையைக் கெடுத்துக் கொண்டிருப்பதைக் கண்கூடாகக் கண்டுள்ளோமே! எடுத்துக் காட்டாக, களங்கமற்ற, மகிழ்ச்சி, எளிய, வணக்கம், திருமணம் ஆகிய சொற்களின் பொருள்களைக் குறிக்க முறையே நிர்மலம், சந்தோஷம், சாதாரணம், நமஸ்க்காரம், விவாகம் ஆகிய சொற்கள் வந்துசேர்ந்துள்ளன. முறையே மலமும், தோசமும், ரணமும், காரமும், கெட்டியாகக் கொண்டுபோய் விடுதல் என்ற மட்டமான—அருவருப்பான செயலும் கலந்துள்ள அச் சொற்கள் தமிழ்மொழியின் இனிமையை எவ்வாறு பாதிக்காதிருக்க முடியும்? ஒரு இழி பொருளைக் குறிக்கும் 'விளக்கமாறு' என்ற தமிழ்ச் சொல்லைப் பிரித்துப் பார்த்தால்கூட விளக்கும்×மாறு [விளக்கம் செய்யும் குச்சிக் கற்றை] என்று அழகிய கருத்தன்றோ காணப்படுகின்றது! தமிழன் ஏது நோக்கி 'பின்னல்' என்று குறித்த பொருளை ஆங்கிலேயன் Pig tail (Pig—பன்றி, tail—வால்; Pig tail—பன்றி வால்) என்றல்லவா குறிப்பிட்டுள்ளான்! எங்கே இனிமை?

இவை நிற்க, இத்தகைய எழுத்துப் பெயர்ப்பினுல் விபரீதங்கூட நேர்ந்துவிடும். 'நஞ்சு' என்ற சொல்லைக்குறிக்கும் (விஷம்) என்ற சொல்லை நாம் 'விடம்' என்று குறிப்பது போல், (பாஷை) என்ற சொல்லை 'பாடை' என்று பெயர்த்து ஏற்றுக்கொண்டால் வெகுவிரைவிலேயே நாமே நம்முடைய "மொழி" என்ற சொல்லுக்கு "பாடை" கட்டியவர்களாகி விடுவோம்!

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னுனே"

என்ற நம்முடைய தொன்மையான இலக்கணநூலின் கூற்றைத் தவருகப் புரிந்துகொண்டோ அல்லது புரியாமலோ நாம் செயலில் இறங்கியதன் விளைவாக இன்று சோறு, ஆணம், பெருங்கடல், நோன்பு, நீர் போன்ற சொற்கள் 'பழையன கழிதலும்' என்ற விதியால் பெரும்பாலான தமிழரிடத்து வழக்கிழந்து சாதம், சாம்பாறு, சமுத்திரம்,

விரதம், ஜலம் போன்ற பிறமொழிச் சொற்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. 'புதியன புகுதலும்' என்ற விதியால் டப்பா, டமாரம், லட்டு, ரிப்பன் போன்ற சொற்கள் தமிழ் மொழியில் புதிதாக வந்து சேர்ந்துள்ளன. அவற்றால் நேர்ந்துள்ள தீங்கை உணராது Radio, Telephone போன்ற சொற்களையும் எழுத்துப் பெயர்ப்புச் செய்யலாமா என்று சிந்திக்க முற்பட்டுள்ளோம்.

நாம் செய்யக்கூடிய புதுமைகள் தமிழ்மொழியின் இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டனவாகவும், அதனுடைய பண்பாடு, நாகரிகம், இனிமை, பொருட்செறிவு இவற்றைப் பாதிக்காதனவாகவும் இருக்க வேண்டுமென்பதே தொல்காப்பியரின் கருத்தாகும். டப்பாவும், டமாரமும் தொல்காப்பியரின் கருத்துக்கு எந்த வகையிலும் பொருந்தா. 'பழையன கழிதலும்' என்று கூறப்போந்த நன்னூலார் நாம் அறிவின் சிகரத்திலே வைத்துப் போற்றவேண்டிய சோறு, நீர் போன்ற சொற்களை அழிவின்பாதைக்குக் கொண்டுசேர்த்துவிடுவோம் என்பதைக் கனவில்கூட கருதி இருக்கமாட்டார்.

"சோறு" என்ற சொல்லை மறப்பதன்மூலம் "சோறுதல்" என்ற சொல்லடியாகப்பிறந்த 'சோறு,' நமக்கு உணர்த்தக்கூடிய பேருண்மை தெரியாமலே போய்விடுவதோடு 'சாதம்' என்ற சொல் தமிழ்மொழியின் பொருட்செறிவையும் போக்கிவிடும். இதைப்போலவே 'நீர்' என்ற சொல்லையும் நோக்குவோம். 'நீர்மை' என்றால் 'தன்மை.' 'நீர்மை' என்ற சொல்லின் அடியாகப்பிறந்ததே 'நீர்.' நீருக்கும் தன்மைக்கும் எந்த வகையில் தொடர்புண்டு? இந்த ஐயத்தைப்போக்க இதோ இருக்கின்றன குறட்பாக்கள்:

"தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்
வானம் வழங்கா தெனின்"

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு".

ஆம், நீர் இல்லையானால் பஞ்சம் தலை காட்டும். பஞ்சம் மஞ்சத்தில் அமர்ந்துவிட்டால் தானத்திற்கும் தவத்திற்கும் இடமேது? அந்த நிலையிலே பஞ்சம் மிஞ்சினால் வறுமை மேலிடும். வறுமை வாட்டும்

போது மக்களிடத்து மக்கள் தன்மைக்கு இடமேது? தங்கள் வறுமையைப் போக்க—பசிப்பிணியைத் தீர்க்கக் கொள்ளை, கொலை போன்ற கொடிய செயல்களில் மக்கள் உள்ளம் நாடிச் செல்லும். இவ்வளவையும் எண்ணித்தான் நேர்மையைநிலைநாட்டும் நீரை, தமிழன் 'நீர் (மை)' (தன்மை) என்றே பெயரிட்டழைத்தான்!

தமிழின் சொல் ஆழம் இத்தனைச் சிறப்பு வாய்ந்தது. இதை அறியாது நீர் என்ற சொல்லுக்குப் பதிலாக (ஜலம்) என்ற சொல்லை 'சலம்' என்று ஏற்றுக்கொண்டால், 'சலம்' என்ற சொல் குருதியிலுள்ள வெள்ளை அணுக்கள் இறந்துபட்டு புண் வழியாக வெளிப்படும் தொகுதியை (சீலை)த்தான் குறிக்கும்! நாம் குடிப்பதும் அதுதான் என்றாகி விடும்!

நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்யும் தொழில் நமது தமிழகத்தில் தொன்றுதொட்டு நடந்துவருகின்றது. அக்கலைக்குத் தமிழகம் முதலிடமும் சிறப்பிடமும் அளித்து வந்துள்ளது என்பதற்கு

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற குறளே தக்க சான்றாகும்.

அத்தொழிலைச் செய்பவன் மெய்வருந்தப் பாடுபடுவதால் அவனை 'உழவன்' என்றும், அவன் தன் உழைப்பால் பெற்ற கூலத்தைப் பிறருக்கும் அளித்துத் தானும் உண்பதால் 'வேளாளன்' என்றும் தமிழர் அழைத்தனர். வேளாளன் என்பதன் பொருளை உணர,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு"

என்ற குறளை இங்கு நினைவிற் கொள்ளலாம். மனிதன் ஓரிடத்தில் நிலையின்றித் திரிந்துவந்த காலத்தே வேளாண்மை (உழவு)யை மேற்கொள்ளத் தொடங்கினன். முதன்முதலில் ஓரிடத்து நிலைபெற்றுக் கூடிவாழத் தொடங்கினன் என்ற வரலாற்று உண்மையைக் 'குடியானவன்'

என்றசொல் அழகாகத் தெரிவிக்கின்றது. இந்தச் சொற்களை எல்லாம் விட்டுவிட்டுப் பயிர்த்தொழில் செய்பவனை 'விவசாயி' என்றோ, அவன் செய்யும் தொழிலை 'விவசாயம்' என்றோ குறிப்பதில் என்ன அறிவு நயத்தைக் காண முடியும்?

இதுகாறும் மேற்கொண்ட ஆராய்ச்சியிலிருந்து, தமிழில் கலைச் சொல்லாக்கத்திற்கு எழுத்துப் பெயர்ப்புச் சிறந்த முறையல்ல என்ற முடிவுக்கு வருகிறோம். இருந்தாலும் இந்தமுறையை முற்றிலும் ஒதுக்கித் தள்ளக்கூடிய நிலையிலும் நாம் இன்று இல்லை.

Cycle, Pencil, Slate போன்று, வெளிநாடுகளிலிருந்து புதிதாக வந்துசேர்ந்த பொருள்களின் பெயர்களும் 'கத்தி' (போர்ச்சுக்கல் சொல்) போன்ற சொற்களும் இன்று தமிழரின் உளங்களில் நன்றாக வேரூன்றிவிட்டதாலும், இச் சொற்கள் எந்தவகையினும் தமிழ் இலக்கண வரம்புகளைப் பாதிக்காதிருப்பதாலும் இச் சொற்களை இன்று ஏற்றுக் கொண்டே தீரவேண்டிய நிலையுள்ளது. முகம் என்ற சொல் 'வடசொல் என மொழிநூலறியாதவர் மொழிவர்; என்றாலும் தமிழர் ஒவ்வொருவராலும் நன்கு அறியப்பட்டுள்ள இச் சொல்லைத் தமிழர் உளங்களை விட்டு ஓட்ட முற்படுவது நம்ஆற்றலைக்கடந்த அழி செயலாகும். 'அகம்' என்பதைப்போல அழகான தமிழோசையுடைய 'முகம்' என்ற சொல்லையும், மற்றும் திருவள்ளுவர் போன்றோரால் இலக்கணமரபு கருதி எடுத்தாளப்பட்டுள்ள தானம், தவம், ஆதி, பகவன் போன்ற சொற்களையும் நாம் ஏற்றுக்கொண்டே தீரவேண்டும்.

பலவகையிலும் இன்னல்கள் நிறைந்துள்ள எழுத்துப் பெயர்ப்பைக் காட்டிலும் 'மொழி பெயர்ப்பை'ச் சிறந்ததாகக் கொள்ளலாம். ஆனால் இந்த மொழிபெயர்ப்புக்கூட எவ்வளவு சிறந்தது என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

Water-fall என்ற சொல்லின் நேர் மொழிபெயர்ப்பான 'நீர் வீழ்ச்சி' என்ற ஒருசொல் வழக்காற்றிலுள்ளது. ஆனால் Water-fall என்றசொல் எதைக்குறிக்கின்றதோ அதையேகுறிக்கக்கூடிய 'அருவி'

என்ற அழகான சொல் தமிழில் உள்ளது. 'அருவி' என்ற சொல் லோடு நீர் வீழ்ச்சி என்ற சொல்லை ஒப்பிடுவோம். அருவி என்ற சொல் நீரானது மேலிருந்துகீழாகப் பொருள்களை அருவிக்கொண்டு இழிந்து வரும் காட்சியை நம் மனக்கண்முன் காட்டுகின்றது. ஆனால் நீர்வீழ்ச்சி என்ற சொல்லில் நீரின் அருவி வரும் செயலோ இழிந்துவரும் காட்சி யோ ஒன்றும் புலனாகவில்லை. நீர்வீழ்ச்சி என்ற சொல், தண்ணீர் மே லிருந்து கீழாக அப்படியே விழுவதைத்தான் உணர்த்துகின்றது ஆன தால், மலையிலிருந்து தண்ணீர் கீழே இறங்கி வருவதை "நீர்வீழ்ச்சி" என்ற சொல்லால் குறிப்பதானது மரத்திலிருந்து கீழே இறங்கிவரும் ஒருவனை 'கீழே விழுகிறான்' என்று சொல்வது போலாகும்!

இதனால் நாம் அறிந்துகொள்வது யாதெனில் நேர் மொழி பெயர்ப்புக் கருத்தாழத்தைப் பாதிக்கும்என்பதாகும். ஆனதால் குறிப் பிட்டுள்ள இரு முறைகளைக் காட்டினும் கலைச்சொல்லாக்கத்திற்கு 'கருத்துப் பெயர்ப்பு' முறையே மிகச் சிறந்ததாகும். மொழிபெயர்ப்பு, கருத்துப் பெயர்ப்பு இவற்றுக்கிடையே நாம் கற்பிக்கும் வேறுபாடு என்னவென்றால், முன்னது, ஒரு பிறமொழிச் சொல்லின் பொருளை நேரடைவான சொல்லால் மொழிபெயர்த்து விடுவது; பின்னது, ஒரு வேற்றுமொழிச் சொல்லின் பொருளை விரிவான முறையிலே தெளி வாகஆய்ந்தறிந்து, அதன்கருத்தைத் தெரிவிக்கக்கூடியதாகப் பொருட் செறிவும் ஆழமும்உள்ள இனியசொல்லொன்றை உருவாக்குவதாகும்.

தமிழ்க்கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்டு, அறிவால் அறியப் பட்ட ஒவ்வொரு பொருளையும் யாரும் அறிய உணர்த்தவல்ல பைந் தமிழ் மொழியை மேன்மேலும் வளப்படுத்த எண்ணும் நாம் "கருத் துப் பெயர்ப்பு" முறையைக் கையாள்வதன் மூலமே நம் மொழியின் சிறப்பியல்புகளைக் குன்றாது காக்கமுடியும். ஆனதால், இந்த முறையே மற்ற முறைகளைக் காட்டிலும் சிறந்ததாகும்.